# 'சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் நீதிமன்றங்களின் பங்களிப்பு உள்ளது'

பெங்களூரு, பிப். 16: சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் நீதிமன்றங்களில் பங்களிப்பு அதிகம் உள்ளதாக கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சித்தப்பா சுனில்தத் யாதவ் தெரிவித்தார்.

பெங்களூரில் சி.எம்.ஆர் பல்கலைக்கழகத்தின் சட்டம், சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் கொள்கை மையத்தை செவ்வாய்க்கிழமை திறந்துவைத்து அவர் பேசியதாவது:

இந்தியாவிலும், வெளிநாட்டிலும் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்த ஆராய்ச்சியில் இந்த மையம் கவனம் செலுத்தும் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பல்வேறு காரணங்களால் சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் நீதிமன்றங்களில் பங்களிப்பு அதிகம் உள்ளது.

நீதிமன்றங்களைப் போலவே தன்னார்வலர்களின் பங்களிப்பு உள்ளதையும் யாரும் மறுப்பதற்கில்லை. சுற்றுச்சூழலைப் பாதிக்கப்படுவதற்கு பொதுமக்களின் பங்களிப்பு முக்கியம். மரங்களை வெட்டுவதை தடுத்து, மரங்களை வளர்ப்பதற்கு அனைவரும் கைகோத்து செயல்பட வேண்டும். நமது முன்னோர்கள் பல்லுயிர்களைப் பாதுகாக்கவும், இயற்கையைப் பேணிக்காக்கவும் முக்கியத்துவம் அளித்தனர். அதனை பின்பற்றுவதை நாம் மறந்துள்ளோம் என்றார்.

நிகழ்ச்சியில் வனத் துறை அதிகாரி விஜயகுமார், பேராசிரியர் சுப்ரமண்யா, பிரணேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.